**MCOP NO:4462/2022 DATE: 22.07.2025**

ம.சா : 1

பெயர் : திரு. முருகன்

த/பெ : திரு. பூங்காவனம்

வயது : 44

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 14 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>முதல் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் நான் நடந்து சென்று கொண்டிருந்தேன். பாதயாத்திரை செல்லும்போது கூட்டமாகத்தான் சென்று கொண்டிருந்தோம் என்றால் இல்லை. ஒருவர் பின் ஒருவராக சென்று கொண்டிருந்தோம். நான் பாதயாத்திரை சென்ற போது கூட்டமாக சென்றோம் என்றால் அப்போது நாங்கள் பேசிக்கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல. 04.10.2023 பிறகு தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராக இருந்ததற்கு அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளேன். எனது வருமானம், வருமான ஈட்டும் திறன் இழப்பு குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டிக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்ததாலும் அந்த வாகனமானது 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அது நிலுவையில் இருந்ததாலும் நான் ஏதாவது இழப்பீடு பெற வேண்டும் என்றால் 2-ம் எதிர்மனுதாரரிடமிருந்து தான் பெற்று கொள்ள வேண்டும் என்றால் இரண்டு எதிர்மனுதாரர்களும் சேர்ந்து கொடுக்க கடமைப்பட்டவர்கள்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அன்றைய தினம் நாங்கள் 60, 70 பேர் பாதயாத்திரை சென்றோம். ஆனால் தனித்தனியாகத்தான் சென்றோம். அந்த சாலையானது நான்கு வழிச்சாலை ஆகும். நாங்கள் 60 போரும் ஒன்றாக சென்றோமா என்றால் இல்லை. முன் பின்னாக

சென்று கொண்டிருந்தோம். நான் இவ்வாறு சொல்வது தவறு என்று சொன்னாலும் பாதயாத்திரை செல்லும்போது ஒரு குழுவாக ஒன்றாகத்தான் செல்வார்கள் என்றும் அவ்வாறு செல்லும்போது வாகனத்திற்கு வழிவிடாமல் ஒருவருக்கொருவர் குழப்பம் ஏற்பட்டு திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டு விபத்து ஏற்பட்டதற்கு நானும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. நான் சரியான பாதையில் தான் சென்று கொண்டிருந்தேன். நான் தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினராக 2015-ல் இருந்து இருக்கிறேன். அதற்கு சந்தாவாக வருடத்திற்கு ரூ.150/- கட்டி வருகிறேன். அதற்கான ரசீது தற்போது என் வசம் உள்ளதா என்றால் இல்லை. நான் அந்த வாரியத்தில் உறுப்பினராக கிடையாது என்றால் சரியல்ல. பெயரளவிற்குத்தான் அடையாள அட்டை பெற்றிருக்கிறேன் என்றால் சரியல்ல. சாலையில் ஏற்படும் விபத்திற்கு மேற்படி தொழிலாளர் நல வாரியத்திலிருந்து இழப்பீடு கொடுப்பார்களா என்றால் இல்லை. கட்டுமான பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால் அதற்கு தான் தொழிலாளர் நல வாரியத்திலிருந்து இழப்பீடு கொடுப்பார்கள். எனக்கு இந்த விபத்தினால் வலது காலில் இரண்டு எலும்புகள் முறிவு ஏற்பட்டது. அக்டோபர் 2023-க்கு பிறகு எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொடர் சிகிச்சை எடுக்கவில்லை என்பதால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்து விட்டது என்றால் எனக்கு வருமான வசதி இல்லாததால் தொடர் சிகிச்சை மேற்கொள்ளவில்லை. எனக்கு வசதி இல்லை என்றால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என்றால் அங்கு செல்ல முடியவில்லை அதனால் செல்லவில்லை. நான் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்து மருத்துவமனையில் குறைவான தொகைகள் பெற்றுக்கொள்வார்கள் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. சிகிச்சைக்கு மட்டும் தான் தொகைகள் வாங்கி கொள்வார்கள். மருந்துகளுக்கு மட்டும் தான் அதிகமாக தொகைகள் வாங்கி கொள்வார்கள். நான் இவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்த விட்டது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.